# தொல்காப்பிய மரபியல்முறைவைப்பும் செய்திகளும்
# The Metre Order and Messages of Marabiyal- A Part Of Tamil Grammar Tholkaappiyam

முனைவர் ச.இரமேஷ் / Dr. S. Ramesh[1]

Date of submission: 2018-05-09
Date of acceptance: 2019-01-02
Date of Publication: 2019-07-30
Corresponding author/s
Name: Dr. S.Ramesh S.Ramesh
Email:

***Abstract***

"Marabiyal" the last part of ancient grammar book Tholkaappiyam which deals with the convention of words. The whole book was written for elucidating how to compose poems in Tamil. Tholkaappiyam allowed to use the spoken language of people and poetic words in Tamil poems in a conventional manner without contravention. Marabiyal speaks about class of nouns comprising of humans and celestial beings, a class of nouns for inanimate things and for beings other than humans and celestials, masculine gender names, feminine gender names, classes of human beings (varnas) and their rights. However, some Tamil researchers have claimed that this part of Varnams stratified as Brahmins, Kshatriya Kings, Mercantile "Vaishyas" and "Vellalas" are pretentious. The aim of this article is to prove evidentially that those Varnams are not indeed ostentatious. It is done by presenting supporting evidences through the metre order of "Marabiyal" and other pertinent messages found in "Tholkaapiyam".

**Key Words:** Tholkapiyam, marabiyal, muraivaipu, poem, Tamil language

### முன்னுரை

தொல்காப்பியம் என்ற இலக்கணநூல் தமிழின் மிகத்தொன்மையான நூல். அதற்கு முந்தைய இலக்கிய இலக்கண மரபுகளையும் உள்வாங்கி எழுதப்பட்டது என்பதனைத் தொல்காப்பியர் பல இடங்களில் அவருடைய சொல்லாட்சிகளின் மூலம் உணர்த்துகிறார். இதனை 'என்ப' என்ற சொல் 141 இடங்களிலும் 'மொழிப' என்ற சொல் 87 இடங்களிலும் ''என்மனார் புலவர்'' என்ற தொடர் 74 இடங்களிலும் உயர்மொழிப்புலவர், உணர்ந்திசினோரே, அறிந்திசினோரே, புலமையோரே, நல்லிசைப்புலவர், வாய்மொழிப்புலவர், யாப்பறிபுலவர், குறியறிந்தோரே, தெளியுமோரே, நூல்நவில்புலவர், தொன்னெறிப்புலவர், நுணங்குமொழிப்புலவர், நேரிதின் உணர்ந்தோர், புலன் உணர்ந்தோரே என்று பல இடங்களில் நேர்மையாகக் குறிப்பிட்டுள்ளார் (சுப்பிரமணியன், 2009, p.15).

தொல்காப்பியம்; எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களையும் ஒரு அதிகாரத்திற்கு ஒன்பது இயல்கள் என 27 இயல்களையும் 1610 நூற்பாக்களையும் (கருத்து வேறுபாடுகள் உண்டு) 5630 சொல்வடிவங்களும் 3999 வரிகளும் 2000த்திற்கு மேற்பட்ட பாடபேதங்களையும் கொண்டது. மேலும், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் போன்ற சிறந்த உரையாசிரியர்கள் இதற்கு உரை எழுதியுள்ளனர். இவை அனைத்தும் நூலின் பழமையையும் சிறப்பையும் உணர்த்துகின்றன.

[1] The author is an Assistant Professor in the Sri Sankara College, Kanchipuram, Tamilnadu, India

மேற்கூறிய உரையாசிரியர்கள் ஒருவர்கூட தொல்காப்பியத்தில் இடைச்செருகல் என்று கூறாத நிலையில், இந்நூல் பிற்கால எழுத்தாளர்களாலும் ஆய்வாளர்களாலும் பலவாறு திரித்துக் கூறப்பட்டுள்ளது. குறிப்பாகத் தொல்காப்பிய மரபியலில் உள்ள நால்வருணம் குறித்த செய்தியாகும். பாரதிதாசன்,

*'படுப்பினும் படாது,தீயர்*

*பன்னாளும் முன்னேற்றத்தைத்*

*தடுப்பினும்,தமிழர் தங்கள்*

*தலைமுறை தலைமுறை வந்*

*தடுக்கின்ற தமிழே! பின்னர்*

*அகத்தியர்,காப்பியர்கள்*

*கெடுப்பினும் கெடாமல் நெஞ்சக்*

*கிளைதொத்தும் கிளியே வாழி!',*

*'பன்னூறு நூற்றாண்டாகப்*

*பழந்தமிழ் மலையின் ஊற்றாய்*

*மன்னரின் காப்பினாலே*

*வழிவழி வழாது வந்த*

*அன்னவை காணுகின்றேன்*

*ஆயினும் அவற்றைத்தந்த*

*முன்னூலை அயலான் நஞ்சால்*

*முறித்ததும் காணுகின்றேன்'*
*(பாரதிதாசன், அழகின்சிரிப்பு, பாடல்:16)*

எனத் தமிழை வாழ்த்தி தொல்காப்பியரைத் தாழ்த்தியது இதைக்கருதியே ஆகும். பண்டைத்தமிழ்ச்சமூகத்தில் சாதிமுறை இல்லை என்ற கருத்து முடிவினால்தான் பாரதிதாசன் இவ்வாறு எழுதினார். இதே கருத்தின்காரணமாகத்தான் பிற்கால ஆய்வாளர்கள் தொல்காப்பியத்தில் இடைச்செருகல்கள் உள்ளன என்று கூறியுள்ளனர் (http://www.tamilvu.org/library/l0100/html/l0100013.htm). எனவே அதற்கான தடை விடைகளை விளக்குவதற்காக தொல்காப்பிய மரபியலின் சூத்திரமுறைவைப்பையும் அவை கூறும் செய்திகளையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**தடைகளும் அவற்றிற்கான விடைகளும்**

தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாட்டில் சாதிமுறை அமைப்பு இல்லை. எனவே தொல்காப்பியத்தில் சாதி குறித்த எவ்வகைக் குறிப்பும் காணப்படவில்லை. வடஇந்திய நாகரிகத்தையும் பண்பாட்டையும் பின்பற்றிய காரணத்தினால் தமிழ்நாட்டில் படிப்படியாகச் சாதி அமைப்பு ஏற்பட்டது. முனிவர்களும் அறிஞர்களும் சாதி முறையை எதிர்த்தனர். தொல்காப்பியர் காலத்திற்குப் பிற்பட்ட புலவரும், மெய்யியல் அறிஞருமான திருவள்ளுவர், சாதி அமைப்பை:

*"பிறப்பொக்கும் எல்லாம் உயிர்க்கும் சிறப்பொவ்வா*

*செய்தொழில் வேற்றுமையான்" (குறள்: 972)*

*"அந்தணர் என்போர் அறவோர் மற்றுஎவ்உயிர்க்கும்*

*செந்தண்மை பூண்டு ஒழுகலான்"*
*(குறள்: 30)*

எனக் கண்டிக்கிறார். சாதி அமைப்பிற்கான எதிர்ப்பைத் தொல்காப்பியத்தின் துணைகொண்டு நலிவுப்படுத்துவதற்காகச் சாதி அமைப்பை வலுப்படுத்த விரும்பிய சில அறிஞர்கள் இதற்குச் சார்பான சில நூற்பாக்களை இயற்றி, தொல்காப்பிய நூற்பாக்களின் இடையே புகுத்தி விட்டனர். இவ்வாறு புகுத்தப்பட்ட நூற்பாக்கள் மிகவும் கட்டமைப்புக் கூடிய தொல்காப்பிய மூலத்துடன் ஒட்டவில்லை. பொருளதிகாரம் 95ஆம் நூற்பா (களவியல் நூற்பா 4) இடைச்செருகலாகத் தோன்றுகிறது. இது தெய்வத்தையும் மனிதனையும் வேறுபடுத்துவதற்கு உதவக்கூடிய பொருள்களின் பட்டியலை தருகின்றது.

*"வண்டே, இழையே, வள்ளி, பூவே,*

*கண்ணே, அலமரல், இமைப்பே, அச்சம், என்று*

*அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ*

*நின்றவை களையும் கருவி என்ப"*

என அது குறிப்பிடுகின்றது. இந்நூற்பாவின் வடிவமும், பொருண்மையும், தமிழ்நாட்டில் தெய்வீகக் கருத்து ஆதாயம் பெறப்பட்ட தொன்மைஇயல் பரவிய பின்பு உருவாக்கப்பட்டு இடையிலே சேர்க்கப்பட்டது என உறுதியாக வெளிப்படுகிறது. நூற்பா 140 (கற்பியல் நூற்பா 3) உம் இடைச் செருகலே ஆகும். அது:

*“மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்*

*கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே”*

மேலோட்டமாகப் படிக்கும் எவரும் இந்நூற்பா பொருண்மைக்கு அப்பாற்பட்டது எனக் கண்டறிவர். நூற்பாக்கள் முறைவைப்பில் பிழைகள் உள்ளன, எனவே அவை இடைச்செருகல்களே என்று சி.இலக்குவனார் கூறுகின்றார் (Thokappiyam, pp. 15-20).

**விடை**

“தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாட்டில் சாதிமுறை அமைப்பு இல்லை. எனவே தொல்காப்பியத்தில் சாதி குறித்த எவ்வகைக் குறிப்பும் காணப்படவில்லை” என்று எந்தச் சான்றின் மூலம் ஆய்வாளர் கூறுகிறார்? சாதிக்குறிப்பு இல்லாத பண்டைத் தொல்காப்பியச்சுவடி ஏதேனும் அவரிடம் உள்ளதா எனத்தெரியவில்லை.

*“பிறப்பொக்கும் எல்லாம் உயிர்க்கும் சிறப்பொவ்வா*

*செய்தொழில் வேற்றுமையான்”*
(குறள்: 972)

என்று திருவள்ளுவரை மேற்கோள்காட்டும் ஆய்வாளர், பிறப்பொக்கும் என்ற கருத்திற்காக எடுத்துக்காட்டினாலும் எல்லா உயிர்க்கும் என்று கூறினாரே தவிர எல்லா மனிதர்க்கும் என்று கூறவில்லை. பிற உயிர்களின் பிறப்பும் மனிதரின் பிறப்பும் ஒன்றுதான். இருப்பினும் அடுத்துத் திருவள்ளுவர் கூறுவது பற்றி எந்த ஆய்வாளரும் கூறுவதாகத்தெரியவில்லை.”சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்” என்பதன் பொருள் என்ன? செய்கின்ற தொழில் அல்லது பதவிக்கு ஏற்ப சிறப்பு வேறுபடும் என்பதாகவே பொருள்கொள்ளவேண்டும். ஆக உயிர்களிடையே வேறுபாடு உள்ளது என்ற கருத்து பெறப்படுகின்றது.

*“அந்தணர் என்போர் அறவோர் மற்றுஎவ்உயிர்க்கும்*

*செந்தண்மை பூண்டு ஒழுகலான்”*
(குறள்: 30)

என்றகுறள்மூலம் அந்தணர் என்ற சாதிப்பிரிவு இருந்தது என்பதும் அவர்கள் எவ்வுயர்க்கும் தீங்கு செய்யாமையால் அறவோர் ஆவர் என்பதும் அறியவருகின்றது.பண்டைத்தமிழகத்தில் சாதிப்பிரிவே இல்லை என்று கூறும் அறிஞர், ‘அந்தணர்’ என்ற சாதிப்பிரிவைக் காட்டும் குறளை மேற்கோள் காட்டலாமா?அடுத்து, மனிதரையும் தெய்வத்தையும் வேறுபடுத்தும் ‘வண்டே இழையே’ எனத்துவங்கும் ‘’பொருளதிகாரம் 95ஆம் நூற்பா (களவியல் நூற்பா 4) இடைச்செருகலாகத் தோன்றுகிறது.” என்கிறார்.

மேலும் இது தெய்வத்தையும் மனிதனையும் வேறுபடுத்துவதற்கு உதவக்கூடிய பொருள்களின் பட்டியலை தருகின்றது. எனவே ‘இந்நூற்பாவின் வடிவமும், பொருண்மையும், தமிழ்நாட்டில் தெய்வீகக் கருத்து ஆதாயம் பெறப்பட்ட தொன்மைஇயல் பரவிய பின்பு உருவாக்கப்பட்டு இடையிலே சேர்க்கப்பட்டது’ என்று கூறுகிறார். இதன்மூலம் தெய்வீகநம்பிக்கை பொருளீட்ட உதவும்காலத்தில்தான் இந்த நூற்பா இடைச்செருகப்பட்டது என்றும் மனிதரையும் தெய்வத்தையும் வேறுபடுத்தும் பொருண்மை தொல்காப்பியர்காலத்தில் இல்லை என்றும் கூறுகிறார். அதே தொல்காப்பியத்தில் ஐயம் நிகழும் இடம் குறிக்கும் நூற்பாவையும் இடைச்செருகல் என்று கூறிவிட்டால் தொல்லை இல்லை.

*சிறந்துழி ஐயம் சிறந்த தென்ப*

*இழிந்துழி இழிவே சுட்டலான*
(தொல்காப்பியம்,களவியல்,நூற்பா3)

*மனிதப்பெண்ணா? தெய்வப்பெண்ணா?*

*என்ற ஐயம் தோன்றுகின்ற,*

*'அணங்குகொல் ஆய்மயில்கொல்லோ கனங்குழை*

*மாதர்கொல் மாலும்என் நெஞ்சு'*
*(குறள்: 1081)*

*என்ற திருக்குறளையும் இடைச்செருகல் என்று கூறிவிடலாமா?*

*''மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்*

*கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே.'*

*(தொல்காப்பியம்,களவியல்,நூற்பா3)*

*என்ற நூற்பாவையும் இடைச்செருகல் என்கிறார். இவ்வாறு சாதிக்குறிப்பு ஏதும் இல்லாத பண்டைத்தொல்காப்பியச்சுவடியை வைத்திருப்பவர் போலச் சான்றுகள் ஏதுமின்றி 'பண்டைத்தமிழ்ச்சமூகத்தில் சாதிமுறை இல்லை' என்ற முன்முடிவின் அடிப்படையில் தீர்ப்பை எழுதிவிட்டு ஆய்வு செய்கிறார்.சாதி அமைப்பை விரிவாகக்கூறும் மரபியலின் நூற்பா முறைவைப்பை ஆராய்ந்தால் சில உண்மைகள் வெளிப்படும்.*

**மரபியலின் சூத்திரமுறைவைப்பு**

*இளம்பூரணர் உரைப்படி மரபியல் 112 சூத்திரங்களை உடையது. சூத்திர எண்களையும் அவற்றின் கருத்துக்களையும் வரிசை முறையையும் உத்திகளையும் பின்வருமாறு காணலாம்.*

*நூற்பா 1, 2, 3 இளமைப்பெயர்கள்,*

*ஆண்பாற்பெயர்கள்,பெண்பாற் பெயர்கள்: தொகுத்துச்சுட்டல்*

*422 விலங்குகளின் இளமைப் பெயர்கள்: வகுத்துக்காட்டல்*

*23 மனித இளமைப் பெயர்கள்: வகுத்துக்காட்டல்*

*2425தாவரங்களின் இளமைப்பெயர்கள் : வகுத்துக்காட்டல்*

*26புறநடை*

*2734 ஓரறிவு முதல் ஆறறிவு வரையான உயிர்கள்.*

*3550 இரண்டாம் சூத்திரத்தில் தொகுத்துச் சுட்டிய ஆண்பாற்பெயர்கள்: வகுத்துக்காட்டல்.*

*51புறனடைபோல ஆண்பால்,பெண்பால் பிரிவுகள் காரணம் கூறப்பட்டது,*

*5268 மூன்றாம் சூத்திரத்தில் தொகுத்துக்கூறப்பட்ட பெண்பாற்பெயர்கள் இங்கு வகுத்துக்காட்டல்.*

*69கூறப்பட்ட இலக்கணத்தை மீறி மக்கள் வழக்கில் இருப்பின் வழுவாகாது எனக்கூறி மேலும் முன்பு ஆண்பாற் பெயர்களில் எடுத்துக்காட்டு கூறாது விடப்பட்ட கடுவன்,கண்டி என்பவற்றிற்கு முறையே ஆண்குரங்கு, ஆண் எருமை என இங்குக் காட்டுகிறார்.*

*70 மேற்கூறிய 69 ஆம் நூற்பா அஃறிணைக்கும் இந்நூற்பா உயர்திணைக்குமாக அமைத்துள்ளார். பெண்,ஆண்,பிள்ளை(இளமை)பெயர்கள் என்பனவற்றிற்கு மக்கள் வழக்கை ஏற்கக்கூறுகிறார்.*

*7185 இதுவரை 69 சூத்திரங்களில் அஃறிணை உயிர்கள் பற்றிக் கூறி 23ஆம் நூற்பாவில் தனித்தும் 27 ஆம் நூற்பாவில் இருதிணைகளை இணைத்தும் உயர்திணையாகிய மனிதர் பற்றித் தேவைகருதி இருநூற்பாக்களில் மட்டும் கூறிய தொல்காப்பியர், மனிதர்களிடையே உள்ள பிரிவுப் பெயர்களை இந்நூற்பாக்களில் (7185) விரிவாகக் கூறுகிறார். அக்காலத்திய நால்வருணச்சமூகம், அவற்றின் தனியுரிமைகள், தொழில்கள், வேறுபாடுகள் போன்ற மனிதனின் தன்மைகளைக் கூறுகிறார். இப்பகுதியே ஆய்வாளர்களால் பெரிதும் இடைச்செருகல் எனப்பட்டது. விலங்குகள்,பறவைகள் ஆகிய அஃறிணைப் பெயர்களையும் தன்மைகளையும் மட்டும் கூறிவிட்டு உயர்திணைப்பெயர்களையும் அதன் தன்மைகளையும் கூறாதுவிடின் பிழையாகாதா?*

*8690 தாவரங்களின் உறுப்புப் பெயர்கள் மற்றும் தன்மைகள் பற்றிக் கூறப்படுகிறது.*

*91112 இலக்கிய இலக்கண மரபுகள்; நிலம்,நீர்,தீ,வளி,விசும்பு ஆகிய ஐம்பூதப்*

பெயர்களைத் திணை,பால் குற்றம் ஏற்படாது வேறுபடாத பெயர்ச்சொல்லுடன் தழுவிச்சொல்லவேண்டும் என்ற இலக்கியமரபை வலியுறுத்துகிறார். தொடர்ச்சியாக செய்யுள் மரபு, உலக வழக்கு, நூல் இலக்கணம், நூல்வகைப் பெயர்கள், சூத்திர இலக்கணம், உரையிலக்கணம், உரைவகைப்பெயர்கள் போன்றவற்றைக்கூறி மரபைப்பின்பற்றாது அமைந்த நூல் குற்றமுடையது என மரபை வலியுறுத்துகிறார் (சண்முகம்பிள்ளை,1998, ஜீஜீ.170195).

தொன்மையான நூல் பல ஓலைச்சுவடிகளில் மாற்றி மாற்றி எழுதப்பட்டபோது சில நூற்பாக்கள் முறைவைப்பில் இடம் மாறியிருக்கவும் சில நூற்பாக்கள் விடுபட்டிருக்கவும் வாய்ப்புண்டு.ஆனால் தொல்காப்பிய மரபியலில் முறைவைப்புப் பிழைகள் ஏதுமில்லை என்பதை மேலே விளக்கப்பட்ட சூத்திரங்களின் வரிசை முறையையும் அவற்றின் கருத்துக்களையும் ஆய்ந்தால் அறியலாம்.உரையாசிரியர்கள் எவரும் கூறாத குற்றச்சாட்டை இலக்குவனார் கூறுகிறார்.அதற்காக உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியரையே குழம்பினார் என்று அவரையும் குறை கூறுகிறார் ய்வாளர். முரண்பாடாகக் கூறியிருந்தால் அதனைக்குற்றம் எனலாம். ஆனால் முறைவைப்பைக் காரணம் காட்டி இடைச்செருகல் என்று இலக்குவனார் கூறுவது முறையன்று.

நால்வருணச் செய்திகள் (மரபியல் 7185) இடைச்செருகல் என செ.ரெ. இராமசாமிப்பிள்ளையும் கருதுகின்றார் (http://www.tamilvu.org/library/l0100/html/l0100013.htm.) இவரும் எவ்விதச்சான்றுகளும் இன்றியே ஆரியர்களின் கருத்து திணிக்கப்பட்டதாகவே கருதுகின்றார்.

இந்தியச் சமூகம் மிகப் பழங்காலத்திலேயே வளர்ச்சியடைந்து இருந்தது என்பதை அதன் வேத, வேதாந்த, இலக்கிய, இலக்கண மரபுகளே காட்டும். தமிழ்ச்சமூக வளர்ச்சிப்போக்கில் (மரபியல்7185) வலிமையான வீரர்களிடமிருந்து உருவான நாட்டைக்காக்கும் அரசனும் அவனுக்கே புத்தி சொல்லும் அந்தணனும் பொருளாதாரத்தில் மேம்பட்ட வணிகனாகிய வைசியனும் உடல் உழைப்பைக் கொண்டு பொருள்களை உருவாக்குகிற சூத்திரதாரியாகிய சூத்திரனும் ஆகிய நால்வருணம் தோன்றிவிட்டது. இது ஆரியர்களிடமிருந்து புகுத்தப்பட்டது, தொல்காப்பியத்தில் நால்வருணம் இல்லை, அவை இடைச்செருகல் என்பவர்கள் தொல்காப்பியத்திற்கு முந்தைய இலக்கியத்தையோ இலக்கணத்தையோ காட்டவேண்டும். உலகின் பழைய நாகரிகங்களாகிய கிரேக்க, மாயன் நாகரிகங்களிலும் இதே வேறுபாடுகளைக்காணலாம் (https://www.hierarchystructure.com/ancient-greek-social-hierarchy/)

ஒரு சமுதாயம் வளர்கிறது என்றால் இன்னொரு சமுதாயம் வீழ்கிறது என்பது இயற்கை. சங்க இலக்கியத்தில்,

*‘வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்*

*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்*

*மேற்பால் ஒருவனும் அவன்கட்படுமே”* (புறநானூறு183)

என்ற பாடல்வரிகள் நால்வருணத்தைச் சுட்டுகிறதே அதுவும் இடைச்செருகலா? மேலும்,தொல்காப்பிய நூற்பாக்களுக்கான சங்க இலக்கியப் பயில்வுகளைக் கீழே காணலாம்.

நூற்பா; அந்தணர்க்கு

*“நூலே கரகம் முக்கோல் மணையே*

*ஆயுங்காலை அந்தணர்க்கு உரிய”* (தொல்காப்பியம், மரபியல் , நூற்பா71)

பயின்றமை;

*“எறிதரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்*

*உறித்தாழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும்*

*நெறிபடச் சுவல்அசைஇ வேறுஒரா நெஞ் சத்துக்*

*குறிப்புஏவல் செயல்மாலைக்*

*கொளைநடை அந்தணீர்" (கலித்தொகை: 9)*

நூற்பா; அரசர்க்கு, அரசர்க்குரிய மரபுகளாக தொல்காப்பியம்

*"படையுங் கொடியுங் குடையும் முரசும்*

*நடைநவில் புரவியும் களிறும் தேரும்*

*தாரும் முடியும் நேர்வன பிறவும்*

*தெரிவு கொள் செங்கோல் அ;ரசர்க்கு உரிய"*

(தொல்காப்பியம், மரபியல் , நூற்பா72)

பயின்றமை;

*"வாழ்க அவன் கண்ணி, வலம் படு முரசம் துவைப்ப வாள் உயர்ந்து இலங்கும்*

*பூணன்பொலங்கொடி உழிஞையன், மடம்பெருமையின் உடன்று மேலவந்த*

*வேந்து மெய்மறந்த வாழ்ச்சி" 17.*

(தொல்காப்பியம், மரபியல் , நூற்பா72)

வைசியன்; நூற்பா;

"வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை" (தொல்காப்பியம், மரபியல் , நூற்பா78)

*"மெய்தெரி வகையின் எண்வகை உணவின்*

*செய்தியும் வரையார் அப்பாலான"* (தொல்காப்பியம், மரபியல் , நூற்பா79)

பயின்றமை;

*"நெடுநுகத்துப் பகல்போல்*

*நடுவுநின்ற நல்நெஞ்சினோர்*

*வடு அஞ்சிவ வாய்மொழிந்து*

*தமவும் பிறவும் ஒப்பநாடிக்*

*கொள்வதூஉம் மிகைகொளாது, கொடுப்பதூஉம் குறைகொடாது*

*பல்பண்டம் பகர்ந்து வீசும்*

*தொல் கொண்டித் துவன்று இருக்கை"* (பட்டினப்பாலை: 206 213)

நூற்பா;வேளாளர்

*"வேளாண் மாந்தர்க்கு உழுதூணல்லது*

*இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"* (தொல்காப்பியம், மரபியல் , நூற்பா81)

வேளாண் வாகை ஆறு,அவை; உழவு, உழவொழிந்ததொழில், விருந்தோம்பல், பகடு புறந்தருதல், வழிபாடு, வேதமொழிந்த கல்வி, (தொல்காப்பியம், மரபியல் , நூற்பா79: இளம்பூரணர் உரை)

பயின்றமை;

*"அள்ளல் தங்கிய பகடுஊறு விழுமம்*

*கள் ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே*

*ஒலித்த பகன்றை விளைந்த கழனி*

*வன்கை வினைஞர் அரிபறை"* (மதுரைக்காஞ்சி: 259263)

*வாகைத்திணையின் பாகுபாடுகளாக*

*அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்*

*ஐவகை மரபின் அரசர் பக்கமும்*

*இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்ஞ்.'*

(தொல்காப்பியம்,பொருளதிகாரம், நூற்பா 74).

### இவையும் இடைசெருகல்களா?

கி.பி. முதலாம் நூற்றாண்டாகக் கருதப்படும் திருக்குறளில் கூட

'குடிப்பிறந்து' (குறள்: 502), 'குடிப்பிறந்தார்' (குறள்: 952, 954, 957), 'வாய்மைக்குடி' (குறள்: 953), 'பழங்குடி' (குறள்: 955), 'ஆன்ற குடி' (குறள்: 992), ஆகிய இடங்களில் 'குடி' என்ற சொல்லாட்சி பயின்று வருகின்றது.

'மாசற்றகுலம்' (குறள்: 956), 'குலத்தின்கண்' (குறள்: 958), 'குலத்தில்பிறந்தார்' (குறள்: 959), 'குலம்வேண்டின்' (குறள்: 959), ஆகிய இடங்களில் 'குலம்' என்ற சொல் பயின்று வருகின்றது.

உயர்குடிப்பிறப்பை 'இல்பிறந்தார்' (குறள்: 951), என்ற சொல்லால் திருவள்ளுவர் கையாள்கிறார். மேலும் 'அந்தணர்' (குறள்: 30, 543), 'பார்ப்பான்' (குறள்: 134) போன்ற சாதிப்பெயர்களையும் கையாண்டுள்ளார். இது போன்ற சொல்லாட்சிகள் நால்வருணம்

இருந்தமையைக் காட்டுகின்றன. எனவே இது ஆரியர்களின் சரக்கு, தமிழ்மரபு இல்லை என்பதற்குச் சான்றெதுவும் இல்லை.

நால்வருணத்தில் நான்காம் நிலையில் வைக்கப்பட்டதால் வேளாளராகிய தமிழக வரலாற்று ஆசிரியர் திரு.கனகசபைப்பிள்ளை தொல்காப்பியர் தோற்றார் என்று பழிக்கிறார் (இராமச்சந்திரன், ஆகஸ்ட் 2010, இதழ்16). மேலும், சி.இலக்குவனார் நால்வருணம் இடைச்செருகல் என்கிறார் (http://www.akaramuthala.in/author/thiru2050).

வடமொழியோடு தமிழை வேறுபடுத்திக்காட்டும் தொல்காப்பியர், (தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பிறப்பியல் 20,21). நால்வருணம் தமிழ் மரபில்லை எனக் கூறியிருக்க மாட்டாரா? ஏன் அவ்வாறு கூறவில்லை எனில் சமூகத்தில் இருந்ததை இலக்கியம் காட்டும் இலக்கியம் காட்டியதை இலக்கணம் காட்டும் அவ்வளவுதான்.மரபியலில் கூறப்பட்ட சாதிசார் சொல்லாட்சிகள் தேவையற்றவையா? அல்லது பழங்காலத்தில் இல்லாதவையா?

அடியோர், வினைவலர் (தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல்25,

அறங்கூறவை (மதுரைக்காஞ்சி492),

காவிதிமாக்கள் (மதுரைக்காஞ்சி499),

இழிபிறப்பாளன் (புறநானூறு170),

இழிசினன் (புறநானூறு82,287,289),

புலையன் (புறநானூறு, 287,360),

பார்ப்பனப்பாங்கன், பாங்கன் (தொல்,செய்யுளியல்181),

பாணன், பறையன், துடியன், கடம்பன் (புறநானூறு 335), போன்ற சொல்லாட்சிகளை வெறும் ஐந்திணைகளில் கூறப்பட்ட தலைமக்களோடு மட்டும் மரபியலின் வருணம்சார் நூற்பாக்களின் துணையின்றி விளங்கிக்கொள்ள இயலுமா? நமக்குப்பிடிக்காத எல்லாவற்றையும் இடைச்செருகல் என்றால் எதுவும் எஞ்சாது.

இதனைப் பின்வரும் கூற்று மெய்ப்பிக்கிறது.

“மரபியல் தவிர வேறுபல இடங்களிலும் நால்வருணம் தொடர்பான, பிராமணரின் மறை தொடர்பான சுட்டுகள் உண்டு. இவற்றுக்கெல்லாம் இளம்பூரணர் தொடங்கி பழைய உரையாசிரியர்கள் அனைவரும் சரியான முறையில் விளக்கம் அளித்துள்ளனர். அவர்களெல்லாம் நம் காலத்திற்குச் சற்றொப்ப 700 ஆண்டுகள் முன்னதாக வாழ்ந்தவர்கள் இப்போது இருப்பதைவிட தமிழ்ச் சமூகம் அப்போது பழைய இலக்கியங்களுக்கு நெருக்கமாக இருந்துள்ளது. எனவே நம் தற்கால சமூகநிலைமையைக் கருத்தில் கொண்டு இவற்றை இடைச்செருகல் என்பது அவ்வுரையாசிரியர்களின் புலமையைக் கேள்விக்குள்ளாக்குகிற செயலாகும்” என்ற கருத்து ஏற்கத்தக்கதே ஆகும் (இராமச்சந்திரன், சொல்வனம், மின்னிதழ்168.1.2010)

தொல்காப்பியர் முழுத்தொல்காப்பிய நூலிற்கும் இறுதிப்பகுதியாகிய மரபியலில் கூறவேண்டியவற்றை எஞ்சாது கூறிமுடித்தார் எனக்கருத இடமுள்ளது (தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், நூற்பா57,58).

இளமை, ஆண்மை, பெண்மை, குடிமை, அடிமை, அரசு, மகவு, குழவி, உறுப்பின்கிளவி, உலகம், உயிர் ஆகியன உயர்திணை ஆயினும் அஃறிணை முடிவு கொள்ளும் என்கின்றார். இவற்றை விரிவாக மரபியலில் தருகிறார் என இக்கட்டுரையின் ஆய்வாளர் கருதுகிறார். எச்சவியலில் கூறாது மரபியலில் ஏன் கூறவேண்டும் எனில் அவை மரபுசார் தகவல்களாகும். இந்த ஒப்புமையைக் கீழே காண்க

கிளவியாக்கம் மரபியல்

இளமை - இளமைப்பெயர்கள்,

ஆண்மை - ஆண்மைப்பெயர்கள்,

பெண்மை - பெண்மைப்பெயர்கள்,

குடிமை,அடிமை,அரசு - .என்ற தொடருக்கு விளக்கமாக நால்வருணச்சமூகப் பிரிவுகளை விளக்குகிறார் எனலாம்

மகவு,குழவி - உயர்திணைப் பெயர்கள்,

உறுப்பின்கிளவிதாவர உறுப்புப் பெயர்கள் - (உயர்திணை) (அஃறிணை),

உலகம் - பஞ்சபூதம்,

உயிர் - ஓரறிவு முதல் ஆற்றிவு வரையான உயிர்கள்.

செய்யுளியலில் எஞ்சிய நூல்,உரை மரபுகளையும் மரபியலில் கூறியுள்ளார். எனவே மரபியலில் இடைச்செருகல் என்பது ஏற்கத்தக்கதல்ல.

### முடிவுரை

மனிதன் உயிர்களுள் ஒரு இனம் என்றாலும் உலகில் மனிதரிடையே பலவிதமான வேறுபாடுகள் உள்ளன. வண்ணவேறுபாடுகள், அளவுவேறுபாடுகள், பண்பு வேறுபாடுகள் ,அறிவு வேறுபாடுகள் இருக்கத்தானே செய்கின்றன. மேட்டு நிலம் குறிஞ்சி என்றும் பள்ளநிலம் நெய்தல் என்றும் காட்டு நிலம் முல்லை என்றும் நீர்வயல்கள் மருதமென்றும் நீரற்ற பாழ்நிலம் பாலை என்றும் தமிழர்கள் ஏன் பிரித்தார்கள்? ஒதுக்கி வைத்து ஒழிக்கவேண்டும் என்றா? இல்லை.இயற்கையை இயற்கையாகக் காட்டுவதே இலக்கியம்.அதன் இயற்கையை, அமைப்பை,அழகியலை வெளிப்படுத்துவதே இலக்கணம். அக்காலச் சமூகத்தைக் காட்டியது இலக்கியம்.

அவற்றிலிருந்து இலக்கியத்தை இப்படித்தான் எழுதவேண்டும் இதுதான் முறை,வழக்கம்,மரபு என்று எடுத்து இயம்பியது தொல்காப்பியம். அகத்தியரையும் தொல்காப்பியரையும் பழிப்பதும் இடைச்செருகல் என்று ஏசுவதும் முறையா? சாதியம் இல்லாத பண்டைத்தமிழ் இலக்கியம் ஒன்றைக்காட்ட முடியுமா? இவ்வாறு எழுதுவதால் மனிதரை மனிதர் அடிமைப்படுத்தவேண்டும் தாழ்த்தவேண்டும்,ஒடுக்கவேண்டும் என்பது இந்த ஆய்வாளரின் கருத்தல்ல.தொல்காப்பியர்காலத்தில் சாதிமுறைஇருந்தது என்பதை சான்றுகளின் அடிப்படையில் ஆய்வதே நோக்கம் ஆகும். நேற்றைய வரலாறு இன்றைக்கு வழிகாட்டுகிறது. வரலாற்றைச்சரியாகப்புரிந்து கொள்ளா விட்டால் வழிமாறிப்போய்விடுவோம். ஆய்வுகளில் விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை.மேலும் மேலும் சமூக ஆய்வுகள் பெருகினால் புரிந்துணர்வு ஏற்பட்டு வேற்றுமை ஒழிந்து மானுடம் செழிக்கும்.

### References


Bharathidasan. (2004). *Azhakin Sirippu*. Madurai: Madurai Pathippu Thiddam.

Ilakuvanar, S. (1963). *Tholkāppiyam in English with critical studies.* Madurai*:* "Kuṛaḷ Neṛi" Publishing House.

Madurai Tamil Ilakkiya Minthokuppu Thiddam. (2015). *Kalithokai*. Retrieved from https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0221.pdf

Madurai Tamil Ilakkiya Minthokuppu Thiddam. (2015). *Madurai Kanji*. Retrieved from https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0496.pdf

Madurai Tamil Ilakkiya Minthokuppu Thiddam. (2015). *Paddinapalai*. Retrieved from https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0077.pdf

Madurai Tamil Ilakkiya Minthokuppu Thiddam. (2015). *Pathitrupattu*. Retrieved from https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0038.pdf

Madurai Tamil Ilakkiya Minthokuppu Thiddam. (2015). *Purananuru*. Retrieved from https:// www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0057.pdf

Ramachandran, S. (2010, January 8). Thokapiyathil Idaiserugala?. *Solvanam Minnithazh*. Retrieved from https://solvanam.com/author/srchandran

Ramasamy Pillai, http://www.tamilvu.org/library/l0100/html/l0100013.htm

Shanmugam Pillai. (1998). *Tholkapiyam Porulathikaram, Ilampuranar Urai*. Chennai: Mullai Nilayam.

Subramaniam Sa., Ve. (2009). *Tamil Ilakana Nuulgal*. Chennai: Manivasagar Pathipagam.

Varatharasan, Mu. (2008). *Thirukural Thelivurai*. Chennai: Kazhaga Veliyidu.